கோடை கால நோய்ப் பரவல், தீ விபத்துகள்: அனைத்து துறை அதிகாரிகள் ஆலோசனை

சென்னை, ஏப். 21: கோடை கால பாதிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை அதிகாரிகளுடனான ஆலோசனைக் கூட்டம் சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பொது சுகாதாரத் துறை, உள்ளாட்சித் துறை உள்பட பல்வேறு துறை சார் அலுவலர்கள் பங்கேற்றனர்.

உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் ஊழியர்களின் பாதுகாப்புக்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், குப்பைக் கிடங்கு, குடிசைப் பகுதிகளில் தீ விபத்து ஏற்படாமல் தடுக்க முன்னெடுக்க வேண்டிய பணிகள் உள்ளிட்டவை குறித்து அதில் ஆலோசிக்கப்பட்டது.

அதேபோன்று, பொது சுகாதாரத் துறை சார்பில் நோய்த் தொற்றுகளைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இதுகுறித்து, பொது சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் செல்வவிநாயகம் கூறியதாவது: கோடை வெப்ப அலையின் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் எவ்வாறு தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பது குறித்த வழிகாட்டுதல்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன.

அதுகுறித்தும், அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

கோடை கால நோய்களைத் தடுக்க உள்ளாட்சி அமைப்புகள் முன்னெச்சரிக்கையாக என்ன செய்ய வேண்டும் என்ற அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டது. கோடை காலத்தில் பல்வேறு இடங்களில் இலவசமாக குடிநீர், நீர் மோர் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன. நல்ல நோக்கத்துக்காக வழங்கப்பட்டாலும், சில நேரங்களில் சுகாதாரமற்ற முறையில் அவை விநியோகிக்கப்படுவதால் அதுவும் நோய்த் தொற்றுக்கு வழிவகுக்கின்றன. எனவே, அவற்றின் தரத்தை உறுதி செய்யும்படி, உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளோம்.

ஆரம்ப சுகாதார நிலையம் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை அனைத்து இடங்களிலும் பொதுமக்களுக்கு கோடை கால பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கான வசதிகள் உள்ளன.

நீர்ச் சத்து இழப்பைத் தடுப்பதற்கான உப்பு - சர்க்கரை கரைசல் பாக்கெட்டுகள் இலவசமாக அங்கு வழங்கப்படுகின்றன. கோடை கால தீவிர பாதிப்பால் உயிரிழப்புகள் இதுவரை ஏற்படவில்லை. எனினும், அதுபோன்ற பாதிப்புகள் கண்டறியப்பட்டால் உடனடியாக தகவல் அளிக்க அனைத்து மாவட்டங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார் அவர்.

வேங்கைவயல் சம்பவம்: ஆயுதப்படைக் காவலர் உள்பட இருவரிடம் குரல் மாதிரி பரிசோதனை

புதுக்கோட்டை, ஏப். 21: புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் தலித் குடியிருப்பின் குடிநீர்த் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, அதே பகுதியைச் சேர்ந்த ஆயுதப்படைக் காவலர் உள்பட இருவரிடம் குரல் மாதிரிப் பரிசோதனை சென்னையில் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் தலித் குடியிருப்பிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்ட சம்பவம் கடந்த டிச. 26 ஆம் தேதி தெரியவந்தது.

இதுகுறித்து தற்போது சிபிசிஐடி போலீஸார் விசாரணை நடத்தி வரும் நிலையில், இச்சம்பவம் வெளியே தெரியவந்த தொடக்கக் காலத்தில் இதே பகுதியைச் சேர்ந்தவர்களால் பயன்படுத்தப்பட்ட கட்செவி அஞ்சல் குழுவில் இருவர் இச்சம்பவம் குறித்த குரல் பதிவை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் தற்போது அவர்களின் குரலை உறுதி செய்யும் வகையில் குரல் மாதிரிப் பரிசோதனை மேற்கொள்ள சிபிசிஐடி போலீஸார் முடிவு செய்து, இதற்கான அனுமதியை வன்கொடுமைத் தடுப்புச் சட்ட சிறப்பு நீதிமன்றத்தில் பெற்றனர்.

இதன் தொடர்ச்சியாக ஆயுதப்படைக் காவலர் உள்பட இருவரையும் சிபிசிஐடி காவல் துணைக் கண்காணிப்பாளர் பால்பாண்டி தலைமையிலான போலீஸார் வெள்ளிக்கிழமை சென்னைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு தடய அறிவியல் பரிசோதனை மையத்தில் இருவரிடமும் குரல் மாதிரி எடுக்கப்பட்டது. அதன்பிறகு அனைவரும் புதுக்கோட்டைக்குத் திரும்பினர்.

சிறுபான்மையின மக்களின் அரணாக திமுக அரசு

முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஏப். 21: சிறுபான்மையின மக்களின் அரணாக திமுக அரசு திகழ்வதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

ரமலான் திருநாளையொட்டி, சென்னை கொளத்தூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழாவில் 2 ஆயிரம் இஸ்லாமிய குடும்பங்களுக்கு நலத் திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். விழாவில் அவர் பேசியதாவது:

திமுகவுக்கும், இஸ்லாமியர்களுக்கான உறவு என்பது வரலாற்றுக்குரிய உறவு. இஸ்லாமிய சகோதரர்கள் மீது முன்னாள் முதல்வர் கருணாநிதி அளவுகடந்த அன்பு வைத்திருந்தார். ஒடுக்கப்பட்டோருக்கும், சிறுபான்மையினருக்கும் என்றைக்கும் துணை நிற்கக் கூடிய கட்சியாக திமுக விளங்கிக் கொண்டிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில் இருக்கக் கூடிய காலகட்டங்களில், சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு எண்ணற்ற திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

ரமலான் பண்டிகையையொட்டி, சென்னை கொளத்தூர் எவர்வின் பள்ளி விளையாட்டுத் திடலில் நடைபெற்ற விழாவில், இஸ்லாமிய குடும்பங்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, மேயர் ஆர்.பிரியா உள்ளிட்டோர்.

சிறுபான்மையினர் நலன் காப்பதை திராவிட மாடல் ஆட்சியின் முக்கிய அடையாளங்களில் ஒன்றாக உறுதி எடுத்துக் கொண்டுள்ளோம். அதன்படியே, சிறுபான்மையின மக்களின் அரணாக திராவிட மாடல் அரசு திகழ்கிறது என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, கொளத்தூரில் தொகுதியில் ஜி.கே.எம். காலனி, கே.சி.கார்டன் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ரூ.23 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

தேர்வு முறைகேடு புகார்கள்: அண்ணா பல்கலை. பேராசிரியர்கள் 9 பேருக்கு கட்டாய ஓய்வு

சென்னை, ஏப். 21: அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேர்வு முறைகேடுகளில் தொடர்புடைய 9 பேராசிரியர்களுக்கு கட்டாய ஓய்வு அளிக்க ஆட்சிமன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் மாதாந்திர ஆட்சிமன்றக் குழுக்கூட்டம் (சிண்டிகேட்) கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், உயர்கல்வித் துறைச் செயலர் தா.கார்த்திகேயன், பல்கலை. துணைவேந்தர் வேல்ராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதில் சிண்டிகேட் உறுப்பினர் மாற்றத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேலும் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தேர்வு முறைகேடுகளில் தொடர்புடைய 9 பேராசிரியர்களுக்கு கட்டாய ஓய்வும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் ஒருவருக்கு பதவி உயர்வு குறைப்பும்செய்யப்பட்டுள்ளதுடன், மற்றவருக்கு 3 ஆண்டுகளுக்கான பணப்பலன்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் கல்லூரிகளில் படிக்கும் போது ஏற்பட்ட விபத்து அல்லது திருமணம் செய்து கொண்டு சென்றது போன்ற குடும்ப சூழ்நிலைகள் காரணமாக பாதியில் நின்ற 168 மாணவர்கள் மீண்டும் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ஆனால் மீண்டும் படிப்பதற்கு அவர்கள் அளித்த கடிதத்தின் உண்மைத் தன்மையை குழு அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

12 மணி நேர வேலை மசோதாவை ரத்து செய்யாவிட்டால் போராட்டம்

கே.பாலகிருஷ்ணன்

சென்னை, ஏப். 21: தொழிற்சாலை சட்டத் திருத்த மசோதாவை ரத்து செய்யாவிட்டால், தமிழக அரசை கண்டித்து போராட்டம் நடத்தப்படும் என மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் கே.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் மற்றும் தமிழ்நாடு மாநிலக் குழுக்கள் சார்பில், மறைந்த கட்சி நிர்வாகிகள் சுனீத் சோப்ரா, கே.வரதராஜன், ஜி.மணி ஆகியோருக்கான நினைவேந்தல் நிகழ்ச்சி சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள கேரள சமாஜத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட பாலகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தனியார் நிறுவனங்களில் வேலை நேரத்தை 8-இல் இருந்து 12 மணி நேரமாக உயர்த்தி சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இது தொழிலாளர்களுக்கு எதிரானது.

திமுக ஆட்சியில் இது ஒரு கரும் புள்ளி. இந்த சட்டத்தை நிறைவேற்றுவதால் வரும் பிரச்னைகளை முதல்வருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளேன். இந்த மசோதாவை உடனடியாக திரும்பப் பெறாவிட்டால் போராட்டம் நடத்தப்படும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் பத்திரிகையாளர் என்.ராம், அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்க துணைத் தலைவர் ஏ.லாசர், மாநில பொதுச் செயலர் வீ.அமிர்தலிங்கம், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச் செயலர் சாமி நடராஜன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நாளை அட்சய திருதியை

சென்னை, ஏப்.21: அட்சய திருதியை ஞாயிற்றுக்கிழமை (ஏப்.23) கொண்டாடப்படுகிறது.

ஆண்டு தோறும் அமாவாசையை அடுத்து வரும் மூன்றாம் நாள் அட்சய திருதியை கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த நாளில் தங்கம், வெள்ளி போன்ற ஆபரணங்கள் வாங்கினால் வீட்டில் தொடர்ந்து செல்வம் பெருகும், தங்கம் மகாலட்சுமியின் அடையாளமாக பார்க்கப்படுவதால் இந்த நாளில் தங்கம் வாங்கினால், வீட்டில் செழிப்பு உண்டாகும் என்பது ஐதீகம்.

நிகழாண்டுக்கான அட்சய திருதியை ஞாயிற்றுக்கிழமை (ஏப்.23) கடைப்பிடிக்கப்படுகிறது.

தெற்கு ரயில்வே

(கதி சக்தி யூனிட் / திருச்சிராப்பள்ளிகோட்டம்)
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். T-SG-36-I-22-2022-2023 தேதி. 01.04.2023

தலைமை செயல்திட்ட மேலாளர், கதி சக்தி யூனிட், திருச்சிராப்பள்ளி கோட்டம் அவர்கள், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் பின்வரும் பணிகளுக்காக ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகளை 24.04.2023 அன்று 14.00 மணி வரை வரவேற்கிறார்.

பணி பற்றிய விவரம்: TPJ கோட்டத்தில் ஹோம் /கேட் சிக்னல் மற்றும் டிஸ்டண்ட் சிக்னல் இடையே உள்ள நிர்வகிக்கப்படும் வெவல் கிராசிங்களுக்கு இன்டர்லாக்கிங் ஏற்பாடுகள் மேற்கொள்ளுதல்

ரொக்க மதிப்பு ரூ இலட்சத்தில்: ரூ. 156.56 இலட்சம்

பிணை வைப்பு தொகை: ரூ. 2,28,300/–

விலைப்புள்ளிக்கான செல்லுபடி காலம் 60 நாட்கள்

மூடப்படும் தேதியும் நேரமும்: 24.04.2023 அன்று 14.00 மணி

பணியை முடிப்பதற்கான காலம் மாதங்களில்: ஆறு மாதங்கள்

ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் தேதி பின்னர் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் ஒப்பந்தப்புள்ளிகள் அதற்குத்த வேலை நாளில் திட்டமிட்ட நேரத்தில் திறக்கப்படும்.

விரிவான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு, கட்டணங்கள் மற்றும் நிபந்தனைகள் உடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி ஆவணம், ஏதேனும் திருத்தம் ஆகியவற்றை https://www.ireps.gov.in இணையதளத்தில் காணலாம்.

இந்திய ரயில்வே நடைமுறையில் உள்ள விதிகளின் படி, சரக்கு மற்றும் சேவை வரி பொருந்தும்.

Follow us on : twitter.com/GMSRailways

TAMIL NADU NATIONAL LAW UNIVERSITY

(A University established by Tamil Nadu Act No.9 2012)
Navalurkuttappattu, Dindigul Main Road, Tiruchirappalli - 620027, Tamil Nadu, India
Phone Off: 0431-2692101: Email :vicechancellor@tnnlu.ac.in: Website : www.tnnlu.ac.in

CORRIGENDUM

" The last sentence of the Advertisement that appeared on **20.04.2023** for the post of Vice-Chancellor shall be read as 'For further details see www.tnnlu.ac.in with the corrigendum issued to the notification on **20.04.2023**'."

DIPR/402/DISPLAY/2023 Search Committee

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்.

NOTICE

Our Client intends to purchase the schedule property from one Mr.Padmanabhan, S/o.Chikaiam residing at No.2614, Space Court, Lancaster, California – 93534, U.S.A, the property is a the self acquired property of Mr.Padmanabhan, and now the said Mr.Padmanabhan intends to sell the property to our client which is more fully described in the schedule. If anybody having any objection over the schedule property may do so within 7 days from the date of publication of this notice to the undersigned along with the documents.

Schedule of Property

All that piece and parcel of agricultural dry land of an extent of 50 Cents comprised in O.S.No.98, Reassigned Survey No. 98/1A2 of No.35, Kanathoor Reddikuppam Village, Thiruporur Block, Chengalpattu Taluk and District and bounded on the:

North by : 30' width Cart Track
South by : Land in S.No.98/1B
East by : Land belongs to Mrs.Syamala Devaraj
West by : Land belongs to U.M.M.Trust, represented by Mrs. Soumini Ramesh

And measuring from

North to South on the Eastern Side : 292 Links
on the Western side : 307 Links
East to West on the Northern Side : 167 Links
On the Southern Side : 167 Links

And lying within the Registration Sub District of Thirupporur and in the Registration District of Chengalpattu.

K.Avinashiappan, B.A., LLB.,
Advocate - Reg.No.9/2000
1/151A,post office street, Avinashi – 641654. Mob: 9788350686

அடையாள சுவாதீன அறிவிப்பு

ICICI Bank

கிளை அலுவலகம்: ICICI வங்கி லிட்., சர்வீஸ் சென்டர் 24, தெற்கு கட்டம், அம்பத்தூர் தொழிற்பேட்டை, அம்பத்தூர், சென்னை-600058.

இப்பலம், கீழ்க்கையொப்பமிட்ட நபர், ICICI பேங்க் லிமிட்டெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலராக, பிணைச்சொத்து பாதுகாப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 - ன் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(12) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 3 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தியும், கோரிக்கை அறிவிப்புகளை வழங்கி, இதன் கீழ்குறிப்பிட்ட கடன்தார்களை அழைத்து, அக்கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையினை அந்த அறிவிப்புகளை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்த கோரினார்.

கடன்தார் அத்தொகையினை திருப்பிச்செலுத்த தவறியமையால், இதன் மூலம் கடன்தார் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், கீழ்கையொப்பமிட்ட நபர், மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(4) - உடன் படிக்க - மேற்சொன்ன விதிகளின் விதி 8 ன் கீழான அதிகாரத்தை செயலுறுத்தி, இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்துக்களை, கீழ்குறிப்பிட்ட தேதிகளில் அடையாள சுவாதீனம் எடுத்துள்ளார். குறிப்பாக கடன்தார் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், இச்சொத்துடன் எந்த வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என எச்சரிக்கப்படுவதுடன், அப்வாறு ஏற்படுத்தப்படும் எந்த வில்லங்கமும் ICICI பேங்க் லிமிட்டெட் - ன் கடன் பொறுப்புக்கு கட்டுப்பட்டது.

வ. எண்	கடன்தார் பெயர் / கடன் கணக்கு எண்	சொத்துக்களின் விபரம் / அடையாள சுவாதீன தேதி	கோரிக்கை அறிவிப்பு தேதி / கோரிக்கை அறிவிப்பில் உள்ள தொகை (ரூபாயில்)	கிளையின் பெயர்
1	மணிகண்டன் P & உதய சூரியா / லோன் எண். F1, 1 வது தளம், பெத்தேல் கப்ரிச் அப்பார்ட்மெண்ட், பூங்கா தெரு, பூங்கா சந்து, சிறுவள்ளூர் கிராமம், புரசைவாக்கம், பெரம்பூர் தாலுக்கா, சிறுவள்ளூர் கிராமம், பூங்கா சந்து பூங்கா சந்து தெரு, சென்னை - 600 011 / LBCHE00002080271 / LBCHE00002080272	சொத்து 1 - பட்டியல் A - (சொத்து முழுவதும்) -இனம் எண். 1 - (முதல் முதல்வர் திரு சந்திரசேகர் (A) D சன்னா டேனியல் என்பவருக்கு செம்பியம் சார்பதிவகத்தில் ஆவண எண். 2315/1993 ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி சொந்தமான சொத்து) -சிறுவள்ளூர் கிராமம், சர்வே எண். 107/1A2A & 29/1A1 ல் அமையப்பெற்ற பூங்கா சந்து, பூங்கா சந்து தெரு, கதவு எண். 9 பகுதி (தென்கிழக்கு பகுதி) அதாவது சென்னை - 600 011, புரசைவாக்கம் தாலுக்கா, சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய இடிக்கப்பட்ட கட்டிடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும் எல்லைகளாவன - கதவு எண். 9 ன் மீதி பகுதி மற்றும் பொது பாதை சந்துக்கு - வடக்கு மற்றும் கிழக்குநாகேந்திரனின் சொத்துக்கு - தெற்கு, மாநகராட்சி பம்பிங் ஸ்டேஷனுக்கு - மேற்கு, மொத்தம் 1050 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம். T S எண். 8, ப்ளாக் எண். 1 பகுதி, T S எண். 57, ப்ளாக் எண். 1. இனம் எண். 2 - (திரு D சாம்சன் டேனியல் என்பவருக்கு செம்பியம் சார்பதிவகத்தில் ஆவண எண். 6906/2002 ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி சொந்தமான சொத்து) -சிறுவள்ளூர் கிராமம், சர்வே எண். 107/1A2A1&29/1A1, T S எண். 8/1 பகுதி, 57 பகுதி ப்ளாக் எண். 1 ல் அமையப்பெற்ற பூங்கா சந்து, பூங்கா சந்து தெரு, (வீட்டு வரி கணக்கீட்டின் படி, பல்லார்டு தெரு) கதவு எண். 9 பகுதி (தென்கிழக்கு பகுதி) அதாவது சென்னை - 600 011, புரசைவாக்கம் தாலுக்கா, சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய இடிக்கப்பட்ட கட்டிடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும் எல்லைகளாவன - பொது பாதைக்கு - வடக்கு கதவு எண். 10 க்கு - தெற்கு, பூங்கா சந்து தெருவுக்கு - கிழக்கு,பொது பாதை, திரு D சந்திர சேகர் (A) சன்னா டேனியல் சொத்துக்கு - மேற்கு, நீள அகல அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் - 34 அடி 9 இன்ச், கிழமேல் தெற்கு புறம் - 34 அடி 3 இன்ச்,தென் வடல் கிழக்கு புறம் - 33 அடி 0 இன்ச், தென்வடல் மேற்கு புறம் - 34 அடி 6 இன்ச் , என மொத்த பரப்பு 1164 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய பழைய இடிக்கப்பட்ட கட்டிடம், மின்சாரம், தண்ணீர் மற்றும் வடிகால் இணைப்பு, ஆகியன. இது வட சென்னை பதிவு மாவட்டம் செம்பியம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.பட்டியல் B - (இத்துடன் பரிமாற்றப்படும் சொத்து) -பட்டியல் C சொத்தில் உள்ள 349 சதுர அடி பிரிபடாத பங்கு இட உரிமை, சொத்துரிமை மற்றும் உரிமைப்பங்கு, மொத்த பிரிபடாத பங்குக்கான மதிப்பு - ரூ. 10,47,000/- (ரூபாய். பத்து இலட்சத்து நாற்பத்து ஏழாயிரம் மட்டும்) பட்டியல் C - இதன் மேல் விவரிக்கப்பட்ட பட்டியல் B சொத்தின் முதல் தளத்தில் உள்ள 838 சதுர அடி அடிச்சுற்று பரப்பு கொண்ட ஃப்ளாட் எண். F1.சொத்து 2 - பட்டியல் A - (சொத்து முழுவதும்) -இனம் எண். 1 - (முதல் முதல்வர் திரு சந்திரசேகர் (A) D சன்னா டேனியல் என்பவருக்கு செம்பியம் சார்பதிவகத்தில் ஆவண எண். 2315/1993 ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி சொந்தமான சொத்து) -சிறுவள்ளூர் கிராமம், சர்வே எண். 107/1A2A&29/1A1 ல் அமையப்பெற்ற பூங்கா சந்து, பூங்கா சந்து தெரு, கதவு எண். 9 பகுதி (தென்கிழக்கு பகுதி) அதாவது சென்னை - 600 011, புரசைவாக்கம் தாலுக்கா, சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய இடிக்கப்பட்ட கட்டிடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும் எல்லைகளாவன - கதவு எண். 9 ன் மீதி பகுதி மற்றும் பொது பாதை சந்துக்கு - வடக்கு மற்றும் கிழக்குநாகேந்திரனின் சொத்துக்கு - தெற்கு, மாநகராட்சி பம்பிங் ஸ்டேஷனுக்கு - மேற்கு, மொத்தம் 1050 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம். T S எண். 8, ப்ளாக் எண். 1 பகுதி, T S எண். 57, ப்ளாக் எண். 1. இனம் எண். 2 - (திரு D சாம்சன் டேனியல் என்பவருக்கு செம்பியம் சார்பதிவகத்தில் ஆவண எண். 6906/2002 ஆக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி சொந்தமான சொத்து) -சிறுவள்ளூர் கிராமம், சர்வே எண். 107/1A2A1&29/1A1, T S எண். 8/1 பகுதி, 57 பகுதி ப்ளாக் எண். 1 ல் அமையப்பெற்ற பூங்கா சந்து, பூங்கா சந்து தெரு, (வீட்டு வரி கணக்கீட்டின் படி, பல்லார்டு தெரு) கதவு எண். 9 பகுதி (தென்கிழக்கு பகுதி) அதாவது சென்னை - 600 011, புரசைவாக்கம் தாலுக்கா, சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய இடிக்கப்பட்ட கட்டிடம் உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும் எல்லைகளாவன - பொது பாதைக்கு - வடக்கு கதவு எண். 10 க்கு - தெற்கு, பூங்கா சந்து தெருவுக்கு - கிழக்கு,பொது பாதை, திரு D சந்திர சேகர் (A) சன்னா டேனியல் சொத்துக்கு - மேற்கு, நீள அகல அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் - 34 அடி 9 இன்ச், கிழமேல் தெற்கு புறம் - 33 அடி 0 இன்ச், தென்வடல் மேற்கு புறம் - 34 அடி 6 இன்ச் , என மொத்த பரப்பு 1164 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதனுடன் கூடிய பழைய இடிக்கப்பட்ட கட்டிடம், மின்சாரம், தண்ணீர் மற்றும் வடிகால் இணைப்பு, ஆகியன. இது வட சென்னை பதிவு மாவட்டம் செம்பியம் சார் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.பட்டியல் B - (இத்துடன் பரிமாற்றப்படும் சொத்து) -பட்டியல் C சொத்தில் உள்ள 230 சதுர அடி பிரிபடாத பங்கு இட உரிமை, சொத்துரிமை மற்றும் உரிமைப்பங்கு, மொத்த பிரிபடாத பங்குக்கான மதிப்பு - ரூ. 6,90,000/- (ரூபாய். ஆறு இலட்சத்து தொண்ணூறாயிரம் மட்டும்) பட்டியல் C - இதன் மேல் விவரிக்கப்பட்ட பட்டியல் B சொத்தின் முதல் தளத்தில் உள்ள 569 சதுர அடி அடிச்சுற்று பரப்பு கொண்ட ஃப்ளாட் எண். F2. அடையாள சுவாதீன தேதி - 18 ஏப்ரல் 2023	20.09.2022 ரூ. 62,91,957/-	சென்னை & செங்கல்பட்டு
2	மாலிக் பாஷுவா I & ப்ரவீன் A / 268/1, ப்ளாக் எண். 4, அய்யாவூபுரம் மேற்கு K K நகர், அயத்தூர் கிராமம், விருகம்பாக்கம் கிராமம், மாம்பலம் தாலுக்கா 268/1, சென்னை - 600 102 / LBCHE00005153835	திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுக்கா, காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார் பதிவு மாவட்டம், எண். 90, அயத்தூர் கிராமம், சர்வே எண். 268/1, இதில் வீடுகளாக பிரிக்கப்பட்டு, உப்பிரிவு செய்யப்பட்டு, அயத்தூர் பஞ்சாயத்து கவுன்சில், U.M. எண். 1/2006, ப்ளாட் எண்.4 ன் படி அங்கீகரிக்கப்பட்டு, "பார்கவி நகர்" என பெயரிடப்பட்டதில் உள்ள 2168 சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் மற்றும் கிழக்கு புறம் உள்ள 1074 சதுர அடி பரப்பளவு கொண்ட காலி வீட்டுமனை இடம். எல்லைகளாவன -30 அடி அகல சாலைக்கு - வடக்கு, ப்ளாட் எண். 5 க்கு - தெற்கு, ப்ளாட் எண். 3 க்கு - கிழக்கு, ப்ளாட் எண். 4 பகுதிக்கு - மேற்கு, இதன் அளவீடுகளாவன - கிழமேல் வடக்கு புறம் - 22.6 அடி., கிழமேல் தெற்கு புறம் - 20 அடி.,தென்வடல் கிழக்கு புறம் - 50 அடி., தென்வடல் மேற்கு புறம் - 51 அடி., என மொத்தம் 1074 சதுர அடி கொண்ட காலி கைட்இக்காலி கைட், காஞ்சிபுரம் பதிவு மாவட்டம், திருவள்ளூர் சார் பதிவகத்தின் கீழ் வருகிறது. / அடையாள சுவாதீன தேதி - 18 ஏப்ரல் 2023	18.10.2022 ரூ. 22,83,528/-	சென்னை
3	நித்யானந்தம் குமாரவேலன் & மல்லிகா குமாரவேலன் / ப்ளாட் எண். 7, 1 வது குறுக்கு தெரு, லட்சுமிபுரம் எக்ஸ்டன்சன், தாம்பரம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் சர்வே எண். 113, புதிய சர்வே எண். 113/1A1 சென்னை - 600 045 / LBCHE00003843375	காஞ்சிபுரம் மாவட்டம், தென் சென்னை பதிவு மாவட்டம், தாம்பரம் ஊர் பதிவு மாவட்ட எல்லைக்குட்பட்ட, தாம்பரம் தாலுக்கா, தாம்பரம் கிராமம், சர்வே எண். 113, புதிய சர்வே எண். 113/1A1 ல் அமையப்பெற்ற, லட்சுமிபுரம் எக்ஸ்டன்சனில் உள்ள 2240 சதுர அடி பரப்பளவுடனான ப்ளாட் எண். 7 என்ற வீட்டுமனை இடம் மற்றும் அதனுடன் கூடிய RCC கட்டிடம், மின் சாதனங்கள், சேவை இணைப்புகள், கட்டணங்கள், வைப்புத்தொகை போன்றவை உள்ளிட்ட சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் முழுவதும் எல்லைகள் மற்றும் அளவீடுகளாவன பின்வருமாறு -வடக்கு - 35 அடி - சர்வே எண். 116 ல் உள்ள இடம், தெற்கு - 35 அடி - 24 அடி சாலைகிழக்கு - 63½ அடி - ப்ளாட் எண் 6 மேற்கு - 64½ அடி - ப்ளாட் எண். 8. / அடையான சுவாதீன தேதி - 18 ஏப்ரல் 2023	18.10.2022 ரூ. 35,71,969/-	சென்னை
4	கலைவாணன் & செந்தில் வடிவு / எண். A-137, VGN அமிடி, ப்ளாக் A, 1 வது தளம், எண்.18, பருத்திபட்டு கிராமம், பூந்தமல்லி தாலுக்கா, 651/3, சென்னை - 600 056 / LBCHE00002383967	திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலுக்கா, ஆவடி நகராட்சி வார்டு எண். 1, ப்ளாக் எண். 81, T S எண். 1., இதற்கு தொடர